தேதி : 06.02.2024
OS.No.111/2018

வா.சா.1

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தகப்பனார் இறக்கும் வரை சேடப்பட்டியில் இருந்த நிலத்தில் இருந்து நெல், அரிசி ஆகியவை வந்து கொண்டிருந்தது. எந்த ஆண்டில் இருந்து சேடப்பட்டி சொத்தில் இருந்து வருமானம் வந்தது என்று தெரியாது. சேடப்பட்டி நிலம் எத்தனை ஏக்கர் நிலம் என்று தெரியாது. சேடப்பட்டி சொத்து பத்திரம் யார் பெயரில் இருக்கிறது என்றால் என் தாத்தா மற்றும் அவரது அண்ணன் தம்பிகள் பெயரில் இருந்தது, அதில் ஒரு பகுதியை விற்றார்கள். என் தாத்தா மற்றும் அவரது அண்ணன் தம்பிகள் பெயரில் இருந்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. சேடப்பட்டி சொத்தின் உரிமை ஆவணம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது. என் தாத்தாவின் உடன் பிறந்தவர்களுக்கும் சேடப்பட்டி சொத்தில் இருந்து நெல் போனதாக கேள்விப்பட்டேன். சேடப்பட்டியில் இருந்த சொத்து என் தாத்தாவிற்கு அவரது சகோதரர்களுக்கும் இடையே பிரிக்கப்பட்டதா என்றால் சில பகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்து பிரித்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சேடப்பட்டி சொத்தை இந்த வழக்கில் பாகமாக சேர்க்கவில்லை. சேடப்பட்டி சொத்தின் விவரங்கள் தெரியாததால் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. சாட்சி தானாக கூறுகிறார் - சேடப்பட்டி சொத்தின் விவரங்களை தேடிக் கொண்டிருக்கிறேன். பிரதிவாதிகளிடம் சேடப்பட்டி சொத்தின் விவரங்களை கேட்டு அறிவிப்பு அனுப்பவில்லை. என் தாத்தாவின் சகோதரர் ரத்தினம் பிள்ளையிடம் சேடப்பட்டி சொத்தின் விவரங்களை கேட்டேன் ஆனால் தரவில்லை. சேடப்பட்டி சொத்தை தவிர என் தாத்தாவின் இதர சொத்துக்களின் விவரம் வேண்டும் என்று நான் வா.சா.ஆ.6 அறிவிப்பிலும், பிராதிலும் கேட்டுள்ளேன். சேடப்பட்டி சொத்தும், வேறு சொத்துக்களும் என் தாத்தாவிற்கு இருந்ததாக தவறாக கூறுகிறேன் என்றும் வழக்கின் தன்மைக்கு ஏற்ப மாற்றி கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் பாட்டி சொத்தின் வருமானத்தில் இருந்தும் ஏ பட்டிகை சொத்து வாங்கப்பட்டது. என் பாட்டி பொண்ணு கண்ணம்மா பெயரில் வரகனேரி, வேங்கூர் ஆகிய இடங்களில் நிலங்கள் இருந்தன. பிராது பி பட்டிகை சொத்துக்கள் அனைத்தும் என் பாட்டி பெயரிலான சொத்துக்கள். எனது அறிவிப்பிலும், பிராதிலும் பி பட்டிகை சொத்து எனது பாட்டி சொத்து என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அனைத்து குடும்ப உறுப்பினர்களின் கூட்டு வருமானம் என்று சொல்வது எனது பெரிய அத்தை மரகதம், எனது அத்தை தனலட்சுமி, எனது தகப்பனார் கனகராஜ் ஆகியோரின் வருமானம் ஆகும். பெரியசாமி பிள்ளையின் வருமானம் இதில் அடங்காது. என் அத்தை மரகதம் மற்றும் தனலட்சுமி ஆகியோர் எந்த ஆண்டு வேலைக்கு சென்றார்கள் என்று தெரியாது. என் தகப்பனார் வேலைக்கு செல்வதற்கு முன்பே என் அத்தைகள் வேலைக்கு சென்று விட்டார்கள். கூட்டு குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தில் இருந்தும் கூட்டு குடும்ப சொத்து வருமானத்தில் இருந்தும் ஏ பட்டிகை சொத்து வாங்கப்பட்டதாக உண்மை நிலவரம் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்தெந்த உறுப்பினர்கள் எந்த காலக்கட்டத்தில் சம்பாதித்தார்கள் என்ற விவரம் எனக்கு

நேரடியாக தெரியாத நிலையில் எனக்கு அதை பற்றி சொல்ல அருகதை கிடையாது என்றால் சரியல்ல. கூட்டு குடும்பம் என்பது எல்லோரும் ஒரே வீட்டில் குடியிருந்து அனைவரின் வருமானத்தையும் சேர்த்து பங்கிட்டு செலவு செய்வது ஆகும். 1978 முதல் என் தகப்பனார் இறக்கும் வரை நான் என் தாயார், என் தகப்பனார் ஆகியோர் தொடர்ந்து ஏ பட்டிகை சொத்தில் வசிக்கவில்லை என்றால் 1973 முதல் 1990 வரை தொடர்ச்சியாக வசிக்கவில்லை ஆனால் 1990 முதல் என் தகப்பனார் இறக்கும் வரை அந்த வீட்டில் தொடர்ந்து வரை வசித்து வந்தோம். என் தகப்பனார் 1973 ல் வேலையில் சேர்ந்தார் என்பதைக் காட்ட என்னிடம் ஆவணம் உள்ளது. நீதிமன்றத்தில் ஆஜர் செய்யலாம். 1990 முதல் 1996 வரை ஏ பட்டிகை சொத்தில் நானும் எனது பெற்றோரும் தொடர்ந்து வசித்ததை காட்ட ஆவணம் இல்லை. நான் 1994 ம் ஆண்டு நான் திருச்சியில் பத்தாம் வகுப்பு படித்தேன். நான் 7 வது, 8 வது வகுப்புக்களை கோயம்புத்துரில் படித்தேன். சாட்சி தானாக கூறுகிறார் - நான் மட்டும் அங்கு படித்தேன், என் பெற்றோர் திருச்சியில் வசித்தார்கள். 9 முதல் 12 ம் வகுப்புகள் திருச்சியில் படித்தேன். நான் திருச்சியில் 9 முதல் 12 ம் வகுப்புகள் படித்ததற்கு என்னிடம் ஆவணம் உள்ளது. ஆஜர் செய்யலாம். நானும் என் பெற்றோர்களும் ஏ பட்டிகை சொத்தில் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2010 ம் ஆண்டு என் தாயாரின் குடும்ப அட்டை திருச்சியில் இருந்தது. 2006, 2007 ஆண்டு முதல் என் தாயாருக்கு திருச்சியில் குடும்ப அட்டை ஏற்பட்டது. இந்த விவரத்தை நிரூபிக்க முடியும். எங்களது பொருட்களை ஏ பட்டிகை சொத்தில் வைத்து சென்றதை காட்ட ஆதாரம் இல்லை. 1996 முதல் ஏ பட்டிகை சொத்தின் முதல் தளம் எங்கள் கட்டுப்பாட்டில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் அத்தைகள் தனலட்சுமி மற்றும் மரகதம் ஆகியோரின் திருமணத்தை என் தகப்பனார் நடத்தியதை காட்ட ஆவணம் இல்லை. என் தகப்பனார் முன்னின்று செலவு செய்து என் அத்தைகள் திருமணத்தை நடத்தியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக கூறுகிறார் - என் அத்தைகளின் திருமணத்தில் ஒரு பகுதியை மட்டும் என் தகப்பனார் கொடுத்தார். 2007 ம் ஆண்டு என் சித்தப்பா ராம சுப்பு வெளியூரில் வேலை பார்த்தார். என் சித்தப்பா வெளியூரில் வேலை பார்த்ததால் என் சித்திக்கு உதவியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் என் தாயார் 2007 முதல் தாவா ஏ பட்டிகை சொத்தில் குடியிருந்தார் என்றால் சரியல்ல, எதார்த்தமாக வந்து 2006 முதல் குடியிருந்தார். 1996 முதல் கோயம்புத்துரில் குடியிருந்த நிலையில் ஏன் 2006 ல் திருச்சிக்கு என் தாயார் வந்து குடியேறினார் என்றால் எனக்கு 2001 ல் திருமணமாகிவிட்டதால் எதார்த்தமாக திருச்சிக்கு வந்து 2006 ல் குடியேறினார். 2001 ல் எனக்கு காதல் திருமணம் கோயம்புத்துரில் வைத்து நடந்தது. அதற்கு என் தாத்தா வரவில்லை. என் சித்தப்பா யுவசங்கரும் என் திருமணத்திற்கு வரவில்லை. என் திருமணத்திற்கு என் பெற்றோர் உள்பட குடும்ப உறுப்பினர்கள் யாரும் வரவில்லை. நான் காதல் திருமணம் செய்ததால் என் தாயாருக்கு என்மீது வருத்தம் இருந்தது. சுமார் 1 வருடத்தில் இந்த மனவருத்தம் நீங்கி என் தாயார் என்னோடு பேச ஆரம்பித்தார். 2001 முதல் 2006 வரை சுமார் 7 அல்லது 8 முறை நான் திருச்சிக்கு வந்து என்

தாத்தாவை பார்த்தேன். அவர் வருத்தப்பட்டார். ஆனால் பாசமாக பிரியத்துடன் பேசினார். என் தாத்தா என் தாயாருடன் பிரியமாகத்தான் இருந்தார். என் தாத்தா இறக்கும் வரை அவருக்கும் என் தாயாருக்கும் இடையே எந்த வருத்தமும் கிடையாது. ஏ பட்டிகை சொத்தின் மாடியில் 1990ல் ஒரு வாடகைதாரர் வசித்தார் என்றால் சரிதான், எனக்கு ஆண்டு சரியாக நினைவில்லை. என் பெற்றோர் அவ்வப்போது வந்து ஏ பட்டிகை சொத்தின் மாடியில் வசித்தபோது எந்த பகுதி சொத்தையும் அவர்கள் ஏகதேசமாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு ஆயுஷ் ஓமம் நடந்தது. 2007 அல்லது 2008ம் ஆண்டு நடந்தது. ஆயுஷ் ஓமம் நடந்தபோது என் தாயார் திருச்சியில் தான் தங்கியிருந்தார். ஆயுஷ் ஓமம் நடந்த போது 2006ம் ஆண்டு நாங்கள் கோயம்புத்துரில் வசித்தோம் என்றும் என் தாத்தா அழைத்ததன்பேரில் என் தாயார் வந்து சென்றார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாத்தா 15.01.2010 அன்று இறந்தார். என் தாத்தா இறந்த பின்னரும் ஏ பட்டிகை சொத்தில் என் தாயார் வசித்து வந்ததை யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். 2007 முதல் வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை என் தாயார் ஏ பட்டிகை சொத்தில் வசிப்பதை ஆட்சேபனை செய்யாததற்கு காரணம் மனிதாபிமான அடிப்படை என்றும் எங்கள் உரிமை அடிப்படையில் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. ஏ பட்டிகை சொத்தில் என் தாயார் பிரதிவாதிகளின் அனுமதியின்பேரில் வசிக்கிறார் என்றும் சட்ட உரிமை அடிப்படையில் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் அனுப்பிய வா.சா.ஆ.6 அறிவிப்பில் உள்ள விவரங்கள் சரிதான். இதற்காக வந்த வா.சா.ஆ.7ல் உள்ள பதில் அறிவிப்பு விவரங்கள் எனக்கு தெரியும். பதில் அறிவிப்பு கிடைத்த பின்னர் என் தாத்தா உயில் எழுதிய விவரம் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த போது ஏற்கனவே என் தாத்தா உயில் எழுதி வைத்துள்ள விவரத்தை தெரிந்து கொண்டேன். முதலில் தாக்கல் செய்த பிராதில் என் தாத்தாவின் உயிலை ஆட்சேபித்து தனியாக பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பியது பற்றியும் அதில் உயில் பற்றி சொல்லியதையும் பிராதில் சொல்லாமல் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2018ல் வழக்கு தாக்கல் செய்தபோது உயிலை பற்றி எந்த பரிகாரமும் ஏன் கேட்கவில்லை என்றால் அவர்கள் செட்டில் செய்கிறோம் என்று சொன்னதால் உடன் நடவடிக்கை எடுக்கவில்லை. சமாதானமாக பணம் தருகிறோம் என்று சொன்னதால் ஆரம்பத்தில் உயில் பற்றி பரிகாரம் கேட்கவில்லை என்ற விவரத்தை பிராது சீர்திருத்த மனு அபிடவிட்டில் சொல்லவில்லை. பாஸ்கர், யுவசங்கர் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகிய குடும்ப உறுப்பினர்கள் செட்டில் செய்வதாக சொன்னார்கள். பாஸ்கர் என்பது உயர்நீதிமன்ற கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆகும். அவரையும், ராம கிருஷ்ணனையும் விசாரித்தால் உண்மை தெரியும். என் தாத்தாவின் உயிலை 2021 அல்லது 2022ல் நகல் எடுத்து விபரங்களை தெரிந்து கொண்டேன். உயில் எழுதிய காலத்தில் என் தாயார் அங்கு இருந்தபோதிலும் உயில் விவரத்தை என் தாயாரிடம் சொல்லாததாலும், என் தாத்தாவிடம் பேசிய போது உனக்கு எல்லாம் நன்றாக செய்ய வேண்டும் என்று தெரிவித்ததாலும், 2017க்கு பின்னர் என் சித்தப்பா எங்களுடன் பழகிய நடவடிக்கையில் மாறுதல் இருந்ததாலும் உயில் மீது சந்தேகம் ஏற்பட்டது. இந்த உயில் எழுதுவதற்கு

முன்பு என் தாத்தா 2 முறை உயில் எழுதி மாற்றப்பட்டதால் சந்தேகம் ஏற்பட்டது. உயிலை தற்சமயம் ஆட்சேபிப்பது காலவதி தோசத்தால் தடைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சென்ற போது உனக்கு நன்றாக செய்ய வேண்டும் என்று என் தாத்தா சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காதல் திருமணம் செய்ததால் என் தாத்தா என்மீது வருத்தத்தில் இருந்தார் என்றும் நான் அவரை சென்று பார்த்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் சித்தப்பா ஆரம்பத்தில் தையல் கடை நடத்தி வந்தார். அந்த கடை நஷ்டம் அடைந்ததால் ஜெராக்ஸ் மற்றும் கம்ப்யூட்டர் தொழில் ஆரம்பித்தார். இதற்கிடையே என் தகப்பனார் ஒரு கேபிள் தொழில் வைத்து கொடுத்தார். அதிலும் நஷ்டம் ஏற்படுத்திவிட்டார். 1993 -1994 காலக்கட்டத்தில் என் தகப்பனார் முதலீடு செய்து 5ம் பிரதிவாதி பெயரில் கேபிள் டிவி உரிமம் எடுத்து தொழில் செய்தார். இந்த விவரத்தை வா.சா.ஆ.6 அறிவிப்பில் சொல்லவில்லை என்றும், அறிவிப்பில் சொல்லப்படாத விவரங்கள் பிராதில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், அசல் பிராதில் சொல்லப்படாத விவரங்கள் கூடுதல் பிராதில் சொல்லப்பட்டுள்ளன என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கின் நிலைப்பாடு தெரியாமல் ஒவ்வொரு நேரத்திற்கும் வெவ்வேறு பரிகாரம் கேட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பெரியசாமியின் சொந்த வருமானத்தில் வாங்கப்பட்டது என்றும் அதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பெரியசாமி வாங்கிய சுய சம்பாத்திய சொத்தை தனது 3 ஆண் குழந்தைகளுக்கும் பிரித்து கொடுத்துள்ளார் என்றும் அதை பற்றி கேள்வி கேட்க எனக்கும் என் தாயாருக்கும் உரிமை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பெரியசாமி தனது சுய சம்பாத்திய சொத்தை விருப்பப்படி உயில் எழுதியுள்ளார் என்றும் அதை கேள்வி கேட்க எனக்கு உரிமை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. ஏ பட்டிகை சொத்தை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.